**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**M.C.O.P.No.347/2022**
**வழக்கு சாட்சி P.W.2**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சம்பூரணம் | தொழில் | : பஞ்சாயத்து பணி |
| தகப்பனார் பெயர் | : நாச்சிமுத்து | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : கோபாலபுரம் | வயது | : சுமார் 42 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 01.07.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்றால் ? சரிதான். விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் ? ஆமாம். யார் புகார் கொடுத்தார்கள் என்று தெரியுமா என்றால் ? தெரியாது. சம்பவம் நடந்த ரோடானது கிழமேல் ரோடு என்றால் ? ஆமாம். புதுக்கோட்டைக்கு போவதற்காக தெற்கு பக்கமாக திரும்பும் போது தான் விபத்து நடந்தது என்றால் ? ஆமாம். கிழமேல் ரோட்டில் தெற்கு பக்கமாக சாலையை அனைவரும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றால் ? சரிதான். விபத்தில் இறந்துபோன வீரப்பன் என்பவர் அந்த இடத்தில் திரும்பாமல் இருந்திருந்தால் விபத்து நடந்திருக்கும் என்றாலும், நான் இறந்துபோன வீரப்பன் குடும்பத்திற்கு வேண்டப்பட்ட நபர் என்பதால் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. இறந்துபோன வீரப்பன் எனக்கு ஏற்கனவே பழக்கமானவர் என்றால் ? தெரிந்தவர் தான். விபத்தானது இறந்துபோன வீரப்பன் என்பவருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றாலும், உண்மையை மறைத்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.07.01 17:46:48 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்